இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நான் உங்களுக்குச் சொல்கிறேன்: கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர்; தட்டுவோருக்குத் திறக்கப்படும். பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? (லூக்கா 11:9-11

# மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களின் கூட்டு ஒருங்கியக்க பயணத்திற்கான ஆய்வு அறிக்கை (கோலாலம்பூர் மாமறைமாவட்டம்)

**பினாங்கு:** பினாங்கில் உள்ள அமல உற்பவி அன்னை பங்கில், 2022, ஜூலை 11 அன்று மலேசிய தேசிய ஆயர் பேரவை நடைபெற்றது. மலேசியாவின் ஒன்பது மாமறை/மறைமாவட்டங்களின் பிரதிநிதிகள் நேரிலும் இயங்கலை வாயிலாகவும் இந்த ஒரு நாள் பேரவை மாநாட்டில் கலந்து கொண்டனர். சிங்கப்பூர் மற்றும் புருணையிலிருந்தும், பிற சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட பேரவை கூட்டத்தின்போது, சபா, சரவாக் மற்றும் தீபகற்பத்தில் இருந்து பல்வேறு மாமறை / மறைமாவட்டங்கள் பலதரப்பட்ட மக்களின் குரல்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அறிக்கைகளின் தொகுப்பை சமர்ப்பித்தனர்.

மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆகிய மூன்று நாடுகளின் அறிக்கைகள் எதிர்வரும் ஆகஸ்ட் 8 முதல் 12 வரை நடைபெறும் கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் போது இறுதி முடிவெடுக்கப்பட்டு, பின்னர் வத்திக்கானுக்கு அனுப்பப்படும். அக்டோபர், 2023-ல் வத்திக்கானில் நடைபெறும் ஆயர்களின் ஆயர் பேரவையில் திருத்தந்தை ஆயர்களுடன் கூடும் போது, உலகம் முழுவதிலுமிருந்து வரும் கண்டங்களின் அறிக்கைகள் முறைப்படுத்தப்பட்டு ஆவணங்களாக ஏற்கப்படவுள்ளது.

நடைபெற்று முடிந்த ஒன்பது மாமறை/மறைமாவட்டங்களின் ஆயர்கள் கூட்டு ஒருங்கியக்க பேரவையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையை / பரிந்துரைகளைப் பிரதிபலிக்கும் சுருக்க அறிக்கைகளை இறைதூதன் முன்வைக்கிறது.

இதன் அடிப்படையில் இந்த வாரம் கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் அறிக்கையைக் காண்போம்.

## கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

ஆயர்கள் கூட்டு ஒருங்கியக்க பேரவை (சினோடலிட்டி) குரலற்றவர்களின் குரலாக விளங்குகிறது. அத்தோடு, விளிம்பு நிலையில் இருப்பவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்றவர்களுக்குச் செவிசாய்க்கிறது. இது பங்கு அளவில் மட்டும் நடைமுறைப்படுத்தப் படாமல் நமது குடும்பங்கள், சமூகங்கள், பணியிடங்கள் மற்றும் சமூகத்தில் வாழ்வோர் மத்தியிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டது.

ஆயர்கள் கூட்டு ஒருங்கியக்க பேரவை (சினோடலிட்டி) பற்றிய நமது அனுபவத்தை வெளிப்படுத்திய சில பண்பாட்டு பகிர்வுகளில், நமது விசுவாசத்தை வெளிப்படையாக ஊக்குவிக்கும் பணியை பாதித்துள்ள அரசாங்கக் கட்டுப்பாடுகள், சமயங்கள் சம்பந்தப்பட்ட சமூக விரோதங்கள், சமயச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் ஆகியவை அடங்கும். மேலும் கத்தோலிக்கர்களின் வழிபாட்டில் ஒரு முத்திரையை பதித்த "அல்லா" என்ற வார்த்தையின் பயன்பாட்டிற்காக ஏராளமான நீதிமன்ற வழக்குகளும் நமது கடந்த 10 ஆண்டுகால போராட்டங்களில் அடங்கும்.



அறிக்கை சமர்பிக்கும் ரீத்தா கிருஷ்ணன்

## தற்போதைய உண்மை நிலை

### இளைஞர்கள்

இக்காலத்தில் இயங்கலை வழி திருப்பலிகள் கிடைப்பதால், பங்குகளில் கொண்டாடப்படும் திருப்பலிகள் மற்றும் இதர நடவடிக்கைகளில் கலந்துகொள்வதில் இளைஞர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. ஆகவே, இளைஞர்கள் பணி செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இளைஞர்களை இணைக்கவும் அவர்கள் புத்துயிர் பெறவும் அவர்களுக்கான புதிய வழிகாட்டிகள் தேவை. மேலும், அவர்களின் பயனுள்ள திறமைகளையும் ஆலோசனைகளையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், பங்கு அளவில், அவர்களிடம் தலைமைப் பொறுப்புகள் ஒப்படைக்கப்படுவதில்லை என்பதோடு, அவர்கள் திறமையற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். அடுத்து பெரும்பாலும், வயது இடைவெளிகள் ஒரு பிரச்சனையாகவும் உள்ளது. சிலரால் பெரியவர்களுடன் இணைந்து பணியாற்ற முடியாத சூழலும் நிலவுகிறது.

## உரையாடல், ஒத்துழைப்பு

இறைமக்களின் குரலுக்குச் செவிமடுப்பதோடு, சீர்த்தூக்கிப் பார்க்கும் மேய்ப்புப் பணி அணுகுமுறையுடன் பங்குகள் செயல்பட வேண்டியது இன்றியமையாதது. மேல் மட்டத்திலிருந்து கீழ்நிலைக்கு திட்டங்களும் முடிவுகளும் கொண்டு செல்லப்படும் மைய நிலை இனி எடுபடாது.

மக்களின் உண்மையான தேவைகளை கண்டறியும் உரையாடல் நிகழ வேண்டும். ஏனெனில், பெரும்பாலும், மக்களுக்குச் சிறந்ததாக இருக்கும் என்று கருதி திட்டங்களை ஆய்வுகள் இன்றி நடைமுறைப்படுத்தும்போது, அவை மக்களின் உண்மை தேவைகளை நிறைவு செய்வதாக அமைவதில்லை. இதனால் வீண் மோதல்களும் தவறான புரிதல்களும் ஏற்படுகின்றன.

தற்போதைய சூழலில், மக்களின் உண்மையான தேவைகளை கண்டறிய பணிக்குழுக்களும் பங்குகளும் முன்வர வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எனவே, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, முழு சமூகத்தின் தேவைகளைப் புரிந்து கொள்ளவும் அவற்றை நிறைவேற்றவும் தலைவர்கள் பகுத்தறிந்து அனைவருடனும் ஒத்துழைக்க வேண்டும்.




நமக்கு தேவை நிர்வாகப் பணிகள் மற்றும் கடமைகளால் மூழ்கியிருக்கும் திருஅவை அல்ல மாறாக, இரக்கம் காட்டும் திருஅவை. ஏழைகள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களின் அழுகையை அலட்சியம் செய்வதை இனியும் தவிர்க்க வேண்டும். இவை அனைத்திற்கும் ஒன்றித்துச் செயல்படுத்த (சினோடல் வழியில்) உருவாக்கம் மற்றும் தியான பயிற்சிகள் இன்றியமையாதவை.

## ஆயர் பேரவை கூட்டு ஒருங்கியக்க (சினோடலிட்டியில்) வளர்ச்சி

இந்த வளர்ச்சி பயணமானது பகுத்தறிவு மற்றும் இறைவேண்டலில் வேரூன்றிய ஒரு செயல்முறையாகும். இந்த வளர்ச்சிக்கான முயற்சிகள் தூய ஆவியானவரின் செயல்பாட்டுக்குத் திறந்திருக்க வேண்டும். பிறரின் குரலுக்குச் செவிமடுக்கும் கலையைப் பயிற்சி செய்தல், ஆவியானவர் சொல்வதைக் கவனித்தல், இவற்றோடு, பேராயரும் விசுவாசிகளின் கருத்துக்களைக் கவனமாகக் கேட்டறிய வேண்டும், ஒற்றுமையை ஊக்குவிக்க வேண்டும். மற்றும் மாமறைமாவட்டத்திற்குத் தேவையான மாற்றங்களைத் திட்டமிட வேண்டும்.

மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி குழு, பங்கு தலைமைத்துவத்தின் கட்டமைப்புகளை மறுஆய்வு செய்ய வேண்டும் - PPC, PCC, PFC மற்றும் பங்கு மேய்ப்புபணி பொது கூட்டங்களில் இருந்து மக்களின் ஆலோசனைகளை பெற வேண்டும்.

## பிற சமயத்தோரோடு..

பிற சமயத்தோரோடு பரந்த விழிப்புணர்வை ஏற்படுத்த கூடுதலான கூட்டு நடவடிக்கைகள் மறுமதிப்பாய்வுகள் செய்யப்பட வேண்டும்.

-சமூகத்தின் தேவைகளை மற்ற சமய அமைப்புகள் அல்லது பிற சபையினரோடு கூட்டாகக் கண்டறிய வேண்டும்.

## கூட்டுப்பணி

⇒ சமூகங்கள் மற்றும் பிற சமயங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மற்றவர்களுடன் ஒத்துழைத்து பணியாற்ற பங்கு அளவிலான பணிக்குழுக்கள் அமைப்பதை மாமறைமாவட்டம் கவனம் செலுத்த வேண்டும்.

⇒ மொழிக் குழுக்கள் பல மொழி சமூகங்களைக் கொண்ட பங்குகளில் தங்கள் மொழியைச் சார்ந்தவர்களும் ஏற்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து, குறிப்பாக கடவுளை வழிபடுவதற்கும், வணங்குவதற்கும் அவர்களின் தாய்மொழி புறக்கணிக்கப் படாமல் இருக்க வேண்டும்.

*அடுத்த வாரம் மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் அறிக்கை இடம் பெறும்.*

# தாத்தாக்கள், பாட்டிகள் & முதியோர் 2வது உலக நாள்

## “அவர்கள் முதிர் வயதிலும் கனி தருவர்”

இன்று, ஜூலை 24ம் தேதி ஞாயிறன்று கத்தோலிக்கத் திருஅவையில் சிறப்பிக்கப்படும் தாத்தாக்கள், பாட்டிகள் மற்றும் முதியோர் இரண்டாவது உலக நாளை முன்னிட்டு, பொதுநிலையினர், குடும்பம், மற்றும் வாழ்வு திருப்பீடஅவை, அந்நாளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இரண்டாவது பதிப்பு ஒன்றை, ஜூலை 14, கடந்த வியாழனன்று வெளியிட்டுள்ளது.

“அவர்கள் முதிர் வயதிலும் கனி தருவர்” (தி.பா. 92:14) என்ற தலைப்பில் சிறப்பிக்கப்படும் இந்த இரண்டாவது உலக நாளான இன்று வத்திக்கானின் புனித பேதுரு பேராலயத்தில் கர்தினால் ஆஞ்சலோ தெ தொனாத்திஸ் அவர்கள் சிறப்பு திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றுகிறார்.

மற்றும் முதியோர் இரண்டாவது உலக நாளில் பங்குகொள்ளலாம் என்று, பொதுநிலையினர், குடும்பம், மற்றும் வாழ்வு திருப்பீட அவை பரிந்துரைத்துள்ளது.

இந்நாளைக் கொண்டாடுவதற்கு உதவியாக, மேய்ப்புப்பணி, மற்றும், திருவழிபாடு சார்ந்த கையேடுகளையும், சில பரிந்துரைகளையும் உலகின் மறைமாவட்டங்களுக்கு அனுப்பியுள்ள அத்திருப்பீட அவை, அந்நாளில் தனிமையில் இருக்கும் முதியோரைச் சந்திப்பவர்கள் மற்றும், அவர்களோடு இருப்பவர்களுக்கு, திருஅவை வழங்கும் நிறைபேறு பலன்கள் உண்டு எனவும் அறிவித்துள்ளது.

தனிமையில் இருக்கும் முதியோரைச்


முதியோர்களுடன் திருத்தந்தை (Vatican Media)

உரோம் மறைமாவட்டத்திற்கு திருத்தந்தையின் பிரதிநிதியாகப் பணியாற்றும் கர்தினால் தெ தொனாத்திஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றும் அதே நாளில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கனடா நாட்டிற்குத் தனது திருத்தூதுப் பயணத்தைத் தொடங்குவார்.

ஜூலை 24ம் தேதி, கனடாவின் புனித அன்னா திருத்தலத்திற்குச் சென்று செபிக்கும் திருத்தந்தை, Iqaluit நகரத்திலுள்ள ஆரம்பப் பள்ளியில் இளையோர் மற்றும், வயதுமுதிர்ந்தோரைச் சந்திப்பார். மேலும், ஜூலை 24ம் தேதி, ஞாயிறன்று நிறைவேற்றப்படும் திருப்பலியில் பங்குகொள்வது அல்லது, அந்நாளில் வயதுமுதிர்ந்தோரைச் சந்திப்பது ஆகிய இரு நிகழ்வுகள் வழியாக, அந்நாளில் சிறப்பிக்கப்படும் தாத்தாக்கள், பாட்டிகள்

சந்திப்பது, இக்காலத்திற்கு ஏற்ற இரக்கத்தின் பணியாகும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியிருப்பதையும் இத்திருப்பீட அவை நினைவூட்டுகிறது. வயது முதிர்வு என்பது ஒரு கொடை. முதியோர் என்பவர்கள், தங்கள் வாழ்வு அனுபவத்தை இளையத் தலைமுறைக்கு எடுத்துரைக்கும் இணைப்புச் சங்கிலியாக உள்ளனர் என்று முதியோரை திருத்தந்தை விவரித்துள்ளார்.

ஒவ்வோர் ஆண்டும், ஜூலை 26ம் தேதி சிறப்பிக்கப்படும் கன்னி மரியாவின் பெற்றோர்களாகிய, அதாவது, இயேசுவின் தாத்தா பாட்டியரான புனிதர்கள் சுவக்கின் மற்றும் அன்னா ஆகியோரின் திருநாளுக்கு அருகில் வரும் ஜூலை நான்காம் ஞாயிற்றுக்கிழமையில் இந்த சிறப்பு நாள் இடம்பெறும் என்பது

# தாத்தா பாட்டி மற்றும் முதியவர்களுக்கான இரண்டாம் உலக தினத்திற்கான இறைவேண்டல்

நீண்ட ஆயுளுக்கான ஆசீருக்காக உமக்கு
ஆண்டவரே, நன்றி நவில்கிறேன். உம்மை
அண்டிவருவோரும் உம்மிடம் அடைக்கலம்
புகுவோரும், எப்போதும்
நற்கனிகளுக்குரியவர்களாக
விளங்குவார்களாக!

ஆண்டவரே, என்னில் ஏற்படும்
ஏமாற்றத்தினால் உம்மை விட்டு விலகும்
என்னை மன்னித்தருளும். என்னில்
வலிமை குன்றும்போது என்னைக்
கைவிடாதேயும்.

நீர் எனக்கு அளிக்கவுள்ள
எதிர்காலத்தையும், நீர் என்னிடம்
ஒப்படைத்த மறைப்பணியையும்
எதிர்நோக்குடன் பார்க்கவும், முடிவின்றி
உம் மாட்சியைப் பாடவும் எனக்குக் கற்றுக்
கொடுத்தருளும்.
என் பேரக்குழந்தைகளையும், உம்மிடம்
அடைக்கலம் தேடும் அனைத்து
குழந்தைகளையும் அன்புடன் காத்தருளும்.

என்னை உனது தீர்மானங்களை
நிறைவேற்றும் மென்மையான
பணியாளனாக்குவதோடு, திருத்தந்தை
பிரான்சிஸ் அவர்களையும் பாதுகாத்து,
தனிமையில் இருந்து உலகை விடுவிக்க
உமது திருஅவைக்கு ஆற்றல் அருள்வீராக.
அமைதி வழியில் நாங்கள் பயணிக்கவும்
செய்வீராக. ஆமென்.

# திருப்பீடத்தின் நிதி சார்ந்த முதலீடுகள் குறித்த புதிய கொள்கை

**வத்திக்கான்:** திருப்பீடம் மற்றும் வத்திக்கான் நாட்டில் மேற்கொள்ளப்படும் நிதி சார்ந்த முதலீடுகள், கத்தோலிக்கத் திருஅவையின் சமூகப் போதனைகளுக்கு முரணாக இருக்க இயலாது என்று, ஜூலை 19, கடந்த செவ்வாயன்று வெளியிடப்பட்ட, திருப்பீடத்தின் ஒரு புதிய கொள்கையில் கூறப்பட்டுள்ளது.

திருப்பீடம், மற்றும் வத்திக்கானில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், கத்தோலிக்கத் திருஅவையின் போதனைகளோடு ஒத்திணங்கிச் செல்வதாக இருக்கவேண்டும் எனக் கூறும் அப்புதிய கொள்கை, மனித வாழ்வின் புனிதம், மனிதரின் மாண்பு, பொது நலன் போன்றுவற்றுக்கு எதிராக இருப்பவற்றில் நிதி சார்ந்த முதலீடுகள் இடம்பெறாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

திருப்பீடம், மற்றும் அதனோடு தொடர்புடைய நிறுவனங்கள் செய்யும் முதலீடுகள், நீதியும், நிலையானதுமான ஓர் உலகை அமைப்பதற்கு உதவுவதாகவும், அவை ஓர் உறுதியான வழியில், போதுமான இலாபத்தோடு திரும்பக் கிடைப்பதாக இருக்க வேண்டும் எனவும் அம்முதலீடுகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டிகளில் கூறப்பட்டுள்ளன.

அம்முதலீடுகள், திருப்பீடத்தின் பணிகளுக்கு உதவுவதாய் அமைந்திருக்க வேண்டும். இப்புதிய கொள்கை, வருகிற செப்டம்பர் முதல் தேதி நடைமுறைக்கு வரும் என்றும், இது முதலீடு கொள்கை அமைப்பால் மேலாண்மை செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கொள்கையை வெளியிட்டுள்ள, திருப்பீடத்தின் பொருளாதாரச் செயலகத்தின் தலைவர் இயேசு சபை அருள்பணி Juan Antonio Guerrero Alves


வத்திக்கானின் அப்போஸ்தலிக்க அரண்மனை

அவர்கள், இதனை, திருப்பீடத்தின் பல்வேறு துறைகள் மற்றும், அவற்றோடு தொடர்புடைய நிறுவனங்களோடு கலந்தாலோசித்து வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

### சீரழியும் வாழ்வாதாரம்

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில். ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில், ஒழுங்காய் பாடுபடு வயல் காட்டில். உயரும் உன் மதிப்பு அயல் நாட்டில்" என்ற கவிஞர் மருதகாசியாரின் பாடல் வரிகள் பொய்த்துப்போகும் அளவிற்கு, உங்களவில் காடழிப்பால் நிகழ்ந்துள்ள பருவநிலை மாற்றம் விவசாயத்தையும் மனுக்குலத்தின் அன்றாட வாழ்வாதாரத்தையும் சீரழிந்து வருகிறது.

# இறைவேண்டலில் நிலைத்திருப்போம் பலன் பெறுவோம் !

ஆண்டின் பொதுக்காலத்தில் 17-ம் ஞாயிறுவில் சந்திக்கிறோம். முதல் வாசகத்தில் ஆபிரகாம் ஆண்டவரிடம் சோதோம் கொமராவுக்கும் எதிராக கிளம்பியுள்ள கண்டனக்குரலுக்கு ஆளானதை குறித்து பரிந்துரையாக உரையாடுகிறார். ஆண்டவரும் அவரின் பரிந்துரையை செவிமெடுக்கிறார்.

நற்செய்தியில் “ஆண்டவரே, இறைவேண்டல் செய்ய எங்களுக்குக் கற்றுத்தாரும்” என சீடர்கள் வினவ அவரும் நாம் மனப்பாடமாக ஒப்புவிக்கும் இறைவேண்டலை கற்றுத்தருகிறார். இயேசு தன்னுடைய பணிவாழ்வின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இறைவேண்டல் செய்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக அவர் திருமுழுக்குப் பெறுகின்றபோதும் (லூக் 3:21) மக்கள் கூட்டம் அவரிடம் வருவதற்கு முன்னமும் (லூக் 5:16) பன்னிரு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுக்கும் முன்னமும் (லூக் 6:12) தன்னுடைய சீடர்கள் தன்னை எப்படிப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்று கேட்பதற்கு முன்னமும் (லூக் 9:18) உருமாற்றம் அடைகின்றபோதும் (லூக் 9:29) தனியாகவும் (மாற் 1:35) இன்ன பிற வேளைகளிலும் அவர் இறைவேண்டல் செய்தார் என்று விவிலியம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றது. இப்படி இறைவேண்டலில் நிலைத்திருந்த இயேசு தான் தன் சீடர்க்கு இறைவேண்டல் செய்யக் கற்றுத் தருகின்றார்.

இறைவேண்டல் என்பது மனிதனையும் இறைவனையும் சங்கமிக்கும் ஓர் உறவுப்பாலம் ஆகும். வார்த்தை அலங்காரக் கோர்வைகளில் பிறப்பெடுப்பது இறைவேண்டலல்ல; மாறாக உள்ளத்தின் உணர்வுகளால் தூண்டப்பட்டு, இறைவனை நாடும் சிறு முயற்சியே இறைவேண்டல். எவ்வளவு நீண்ட நேரம் இறைவேண்டல் செய்தோம் என்பதில் இறைவேண்டலின் வெற்றி அடங்குவதில்லை. மாறாக இறை உறவாடலில் சங்கமித்தல் இன்றியமையாதது

இயேசு தன் சீடர்க்குக் கற்றுத்தரும் இறைவேண்டல் இரண்டு பகுதிகளாக இருக்கின்றது. முதற்பகுதி இறைவனின் ஆட்சி இப்புவியில் வருவதற்காகவும் இரண்டாவது பகுதி நம்முடைய தேவைகட்கு வேண்டுவதாக இருக்கின்றது. உண்மைதான், எப்போதெல்லாம் நாம் இறைவனுக்கு முதலிடம் கொடுத்து, அவருடைய ஆட்சிக்காகவும் அவருடைய திருவுளம் நிறைவேறுவதற்காகவும் மன்றாடுகின்றாமோ அப்போது இறைவன் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்வார். ஏனெனில், நம்முடைய இறைவன் நாம் கேட்கும் முன்னமே, நம்முடைய தேவைகளை அறிந்துவைத்திருப்பவர் (மத் 6:8). எனவே, இறைவனை நோக்கி, அவருடைய திருவுளம் நிறைவேற வேண்டுவதே சிறப்பானதாகும்.

மேலும் இது ஒரு தனி நபரின் இறைவேண்டல் அல்ல. தந்தையை நோக்கிய பிள்ளைகளின் இறைவேண்டல், ஒரே தந்தையின் பிள்ளைகள் என்ற முறையில் உலகலாவிய இறைவேண்டல். ‘இறைவேண்டல் என்பது கடவுளின் கைகளில் நம்மை ஒப்படைத்துவிட்டு, அவருடைய திருவுளம் நிறைவேறக் காத்திருப்பதாகும். கடவுளின் திருவுளம் நிறைவேற நாம் மன்றாடினால், நம்முடைய தேவைகள் நிறைவேறும் என்பது உறுதி. ஆகவே, நாம் ‘இறைவா! உம்முடைய திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல, மண்ணுலகிலும் நிறைவேறுக’ என்று மன்றாடுமாறு கற்பிக்கிறார் இயேசு.

-ஆவி டேவிட், குளுவாங்

**ஆண்டின் பொதுக்காலம் 17-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | தொ.நூ 18:20-32 |
| தி. பாடல்: | 138:!-3.6-8 |
| 2ம் வாசகம்: | கொலோ2:!2-14 |
| நற்செய்தி: | லூக் 11:1-13 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை- வாரம் 1